*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.158/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.இராமசாமி த/பெ. சடையன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of*

**07.02.2024.**

துவக்க நேரம் 12.12

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறையில் உள்ள பாச்சாடு கிராமத்தில் குடியிருந்து, அரசுப்பள்ளியில் பகுதிநேர ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.11.2019 ம் தேதி மாலை சுமார் 03.30 மணியளவில் நான் வேலை செய்யும் பாச்சாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி.லதா அவர்களை, எனது இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு கருமந்துறை நோக்கி சென்றுகொண்டிருந்தேன்.

2) அப்போது பகுடுப்பட்டு பஞ்சாயத்து மோட்டார் ரூம் அருகே எங்களுக்கு எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் வந்து, எங்கள்மீது மோதிவிட்டார்கள். அதில் எனக்கு வலது கை ஆள்காட்டி விரலிலும், என்னுடன் வந்த தலைமையாசிரியர் திருமதி.லதா அவர்களுக்கு தலையிலும் காயம் ஏற்பட்டது.

3) எதிரே இருசக்கர வாகனத்தில் வந்தவர்களுக்கும் அடிபட்டிருந்தது. திருமதி.லதா அங்கிருந்து பேருந்தில் ஏறி அவரது ஊரான வாழப்பாடிக்கு சென்றுவிட்டார். நான், எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக கருமந்துறை அரசு மருத்துவமனையிலும், பின்னர் ஆத்தூர் அரசு

மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுக்கொண்டேன். பின்னர் ஒருவாரம் கழித்து கருமந்துறை காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்தை குறித்து புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) புகார் மனுவில், "பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவிற்காக காய்கறி வாங்க சென்றபோது சம்பவம் நடந்ததாக" குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பள்ளியில் மதிய உணவு வேளை என்பது 12.30 மணி முதல் 01.30 மணிவரை என்றால் சரிதான்.

2) சம்பவம் நடைபெற்றது 18.11.2019 ம் தேதி என்றும், நான் ஆத்துார் அரசு மருத்துவமனையில் 25.11.2019 ம் தேதிதான் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றும் சொன்னால் சரிதான். 25.11.2019 ம் தேதி முதல் 27.11.2019 ம் தேதிவரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்

3) புகார் மனுவினை காவல் நிலையத்திற்கு சென்றுதான் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில், 26.11.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு புகாரினை கருமந்துறை காவல் நிலையத்தில் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) புகார் மனு போலிசாரால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், புகார் மனுவில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பள்ளியிலிருந்து பணிநேரத்தில் வெளியே செல்லும்போது Movement Register–ல் குறிப்பிட்டுத்தான் செல்லவேண்டும் என்றால் நான் தற்காலிக பணியில் இருந்ததால் எனக்கு Movement Register இல்லை.

5) நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், சம்பவத்தின்போது நான்தான் பள்ளி தலைமையாசிரியரை வாழப்பாடி பேருந்திற்கு ஏற்றிவிடவேண்டி இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று,

எதிரி ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டேன் என்றும், எதிரி மற்றும் அவருடன் வந்த அவரது தந்தை பலத்த அடிபட்டிருந்ததால் புகாரினை கொடுக்க இயலாத சூழ்நிலையில், அவர்களுக்கு முன்பாக அவர்கள் மீது நான் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு புகாரினை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6) நான், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், உண்மையில் இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் இவ்வழக்கின் எதிரி மற்றும் அவரது தந்தை தான் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.31

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.